LIBRARY

★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 சித்திரை 9 றஜப் 18 இதழ் 66
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 21—4 84

## ரூ. 7 லட்சம் தங்கத்தை கடத்த முயன்ற இளைஞர்

### கட்டுநாயக்காவில் நேற்றிரவு கைது!!

(கட்டுநாயக்கா)

ஏழு லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை உடலில் மறைத்து கடத்திச் செல்ல முயன்ற இளைஞர் ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்றிரவு கைது செய்யப்பட்டார்.

விமான நிலைய பொலிஸார் நடத்திய விசாரணையில், குறிப்பிட்ட இளைஞர் போலி கடவுச்சீட்டுடன் (பாஸ்போர்ட்) வெளிநாடு செல்ல முயற்சித்தார் என்பது தெரிய வந்தது.

தங்கத்தை உடலில் மறைத்து கொண்டு செல்ல முயற்சித்ததை இளைஞர் ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்த இளைஞர் இன்று காலை நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார்.

★ மஹரகம செல்லவிருந்த ஆசிரியர்களுக்கு

# பயிற்சி வகுப்புகள் ஆகஸ்டில் நடைபெறும்!

## கல்வி அமைச்சர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஆசிரியர் நியமனம் பெற்று, மஹரகமவில் தற்பொழுது நடைபெற்றுவரும் பயிற்சி வகுப்புகளுக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு இதே பயிற்சி ஆகஸ்ட் மாதத்தில் ஏற்பாடு செய்யப்படும் என்று கல்வி அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்கா உறுதியளித்துள்ளார்.

இத்தகவலை வெளியிட்ட யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், மேற்படி விஷயமாக, கல்வி அமைச்சருடன் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை தொடர்பு கொண்டு கோரிக்கை விடுத்த போது கல்வி அமைச்சர் உறுதியளித்ததாகத் தெரிவித்தார்.

தற்போதுள்ள நிலையில் மஹரகமவில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளுக்கு செல்ல முடியாதிருப்பதாக ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் யாழ் பிரஜைகள் குழுவிடம் புகார் செய்திருந்தனர்.

யாழ் பிரஜைகள் குழுச்செயலாளர் இதுபற்றி அமைச்சர் திரு. செ இராசதுரையுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து அவர், கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டு பேசினார்.

ஆகஸ்ட் மாதம் இப்பயிற்சி வகுப்பை எங்கு வைப்பதென ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

இப்பயிற்சிக்கு செல்லாதவர்கள் உடனடியாக தற்போதுள்ள நிலையில் பயிற்சியில் பங்குபற்ற இயலவில்லை என்று கல்வி அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் யாழ்.பிரஜைகள் குழுச்செயலாளர் தெரிவித்துள்ளார். (எ)

### 128 பேர் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடந்த அசம்பாவிதங்கள் தொடர்பாக நேற்றுவரை 128 பேர் யாழ். பொலிஸில் புகார் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர்கள் காணாமற் போனவர்கள் தொடர்பாகவும் வீடு, வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் சேதம்பற்றியும் புகார் செய்யப்பட்டுள்ளது. (எ)

### விசாரணை தொடருகிறது

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையில் கைப்பற்றப்பட்ட 15 லட்சம் ரூபா பெறுமதியான 5 கிலோ தங்க நகைகள் தொடர்பாக இரகசியப் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்திவருகின்றனர். (எ)

## 70 பேர் பற்றிய தகவல் கிடைத்தது

### யாழ். பிரஜைகள் குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடந்த அசம்பாவித சம்பவங்களின் போது இறந்தவர்கள், காணாமல்போனவர்கள் தொடர்பாக 70 தகவல்கள் கிடைத்துள்ளதாக யாழ் பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

6 முஸ்லிம் இளைஞர்களும் காணாமல் போயிருப்பதாக தகவல்களிலிருந்துதெரியவருவதாக அவர் கூறினார்.

காணாமற்போனவர்கள் பற்றிய விபரங்களை மேலும் நாம தப்பறிந்தால் நேரில் அல்லது கடிதம் மூலம் உடனடியாக அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

### ராய்ட்டர் செய்தி: ஓர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாண சம்பவங்கள் பற்றி 'ராய்ட்டர்' நிருபர், யாழ். பிரஜைகள் குழுவினரைச் சந்தித்து கேள்விகள் கேட்டபோது; உயிரிழப்புகள், காணாமற்போனவர்கள் குறித்து பல்வேறுவகையான மதிப்பீடுகள் பவரிலும் சொல்லப்பட்டன. சிலர் நூறு என்றனர். சிலர் இருநூறு, முந்நூறு என்றனர். வேறு சிலர் 2?4 என்று கூறினர். இவ்விதம் கேள்விப்பட்டதையே நானும் ஒரு மதிப்பீடாக கூறினேன். சரியான மதிப்பீடு எமக்கு இதுவரை கிடைக்கவில்லை என்றும் நிருபரிடம் சொன்னேன்" என்று யாழ் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் ஹூபர் ஜெயசிங்கம் தெரிவித்துள்ளார்.

"இறந்தவர்கள் தொகை பற்றி மேலும் அறியவேண்டியுள்ளது எனவே பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் இழப்புகளுக்குள்ளானவர்கள் யாழ். பிரஜைகள் குழுவுடன் தொடர்பு கொள்ளும்படி

(8-ம் பக்கம் பார்க்க)

நால்வரைப் பலிகொண்ட பார்சல் குண்டு:

## சம்பவதினத்துக்கு மறுநாள் சந்தேகநபர் யாழ்ப்பாணம் வந்தாராம்

### இராணுவமுகாமில் குண்டு தயாரானதா?

(கொழும்பு)

கொழும்பு புஞ்சி பொரல்ல பகுதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்குபேர் பார்சல் குண்டு ஒன்று வெடித்ததனால் பலியானது தெரிந்ததே.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்தது.

அக்குண்டு கனேமுல்ல இராணுவ முகாமில் தயாரிக்கப்பட்டது என்று சி. ஐ. டி. பொலிஸார் தெரிவித்துள்ளனர் அத்துடன் அதனைத் தயாரித்தவர் குண்டு தயாரிப்பதில் விசேடதிறமை கொண்டவரென்றும் அவர் குண்டு வெடிப்பு நிகழ்ந்த மறுநாள் அதாவது கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கு பணிமாற்றச் சென்றார் என்றும் சி. ஐ டியினர் மேலும் தெரிவிக்கனர்.

இச்சந்தேகநபருடன் அக்குண்டைத்தயாரிப்பதில் இன்னும் மூன்று இதேவிதர்கள் சடுபட்டனர் என்றும் கூறப்படுகிறது. சி ஐ டி. பொலிஸார் தமது விசாரணைகளை மேலும் விரிவாக்கி வருகின்றனர்.

நால்வரைப் பலியெடுத்த அக்குண்டு இராணுவ முகாமில் எவ்வாறு இரகசியமாகத் தயாரானது என்பது பற்றி அவர்கள் ஆராய்கின்றனர்.

இச்சம்பவம் பற்றிய புலன் விசாரணைகளை பொலிஸ் அத்தியட்சகர் ஐ. ரி. கனகரத்தினம், அத்தியட்சகர் ஹெ...

(8-ம் பக்கம் பார்க்க)

### தண்டவாளத்தில் குண்டு வெடித்தது

(வவுனியா)

பரந்தனுக்கும் ஆனையிறவுக்குமிடையில் 21-வது மைலில் ரயில் தண்டவாளத்தில் குண்டு ஒன்று வெடித்ததில் 15 சிலிப்பர் கட்டைகள் சேதமுற்றுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

## மற்றுமொரு உப்புக் கப்பல் காங்கேசன் வருகிறது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து இரண்டு லட்சம் மூடைகள் உப்பு பங்களாதேஷுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு நாளை வரும் 'பென்ராவை' எனும் சிங்கப்பூர் கப்பலில் மேற்படி உப்பு ஏற்றுமதி செய்யப்படவிருக்கிறது.

குறிஞ்சாத்தீவு உப்பளத்திலிருந்து சுமார் நூறு லொறிகள் தினமும் சேவையில் ஈடுபடுவதுடன் ஐநூறு தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்றும் அந்நியச் செலாவணியாக உப்புக் கூட்டுத்தாபனத்துக்கு முப்பது லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது என்றும் ஏற்றுமதி வேலைகளைப் பொறுப்பேற்றிருக்கும் ஜெயபாலசிங்கம் கம்பெனி அதிகாரி தெரிவித்தார்

காங்கேசன்துறை வரலாற்றிலேயே இம்முறைதான் துறைமுகத்திற்குள் ஏற்றுமதியாகும் பெரிய... இது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்கு நேரம்

(கொழும்பு)

யாழ் மாநகர சபை எல்லைக்குள் பதினொராவது நாளாக இன்றும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

ராஜாங்க அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில், மறு அறிவித்தல்வரை ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து இரவு எட்டுமணி முதல் அடுத்தநாள் ... அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் மா தட்டுப்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கடைகளில் குறிக்கப்பட்ட அளவு மாவு மட்டுமே பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

ப. நோ. கூ. சங்க லொறிகள் நேற்று களஞ்சியத்திற்கு சென்ற போது மா கப்பல் வராததினால் குறைந்தளவு மாவே வழங்குவதாக அங்கு தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

யாழ் மாநகரசபை நோ. கூ. சங்கத்திற்கு நேற்று 100 மூடை மா மட்டுமே வழங்கப்பட்டதாம் சில கூட்டுறவு சங்க லொறிகள், மாபெறாமல் திரும்பியதாகவும் கூறப்படுகிறது

பாவனையாளர்கள் கூடிய அளவு மாவை வாங்கி வீட்டில் சேமித்து வைப்பதனாலேயே மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக மற்றொரு காரணமும் கூறப்படுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் பேசப்படுவது ஒவ்வொருவர் உதடும் உச்சரிப்பது

# லக்ஸ்பிறே



உற்பத்தியில் முன்னணியில் திகழும் நாடுகளான நியூசீலாந்து, ஒல்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வரும் பால்மா.




லக்ஸ்பிறே ஒரு நிறையுணவு. பூரணத்துவமான வாழ்க்கைக்கு உதவி செய்கிறது. பெறுமதியான ஆடைநிறைந்த லக்ஸ்பிறே பால்மா ஊட்டச்சத்தும் போஷாக்கும் நிறைந்த சுத்தமான பசுவின் பாலுக்கு நிகரானது.

மூன்று லமினேட் ஆலான, நைதரசனால் அலசப்பட்ட, விசேஷ பாதுகாப்பு உறையில் அடைக்கப்பட்டது. நீங்கள் பாவிக்கும் வரை அதன் புதிய தன்மை பேணப்படுகிறது.

லக்ஸ்பிறே எல்லாவிதத்திலும் பசுவின் பாலின் தன்மையுடையது.

இளையவரோ, முதியவரோ உங்களுக்கு லக்ஸ்பிறே அவசியம்தேவை உங்கள் உள்ளத்தை விழிப்புடனும் உடலை திடகாத்திரத்துடனும் தினமும் பேண நாள்தோறும் அருந்துங்கள்.

500 கிறாம், 250 கிறாம் பக்கட்டுகளில் கிடைக்கும்

விலை 500 கிராம் - ரூபா 26.00

250 கிராம் - ரூபா 14.50

LANKA MILK FOODS

ZENITH

**லக்ஸ்பிறே–நாட்டு மக்களின் ஊட்டம் மிகுந்த பாலுணவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இந்திய வம்சாவளியினருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை கிடைத்ததும் நாடற்றவர் பிரச்னை தீரும்"

### ஜனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)
"இந்திய வம்சாவளிநாடற்ற மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டதும் நாடற்றவர் பிரச்னை தீர்ந்து விடும்."

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நுவரெலியா நகர மண்டபத்தில் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர்களின் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:- "பத்து லட்சம் பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. இவர்களில் ஐந்து லட்சம் பேர் நாட்டுக்கே இந்தியா சென்றுள்ளனர். 96,000 இந்திய வம்சாவளி மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கவேண்டியுள்ளது" என்று கூறினார்.

## உத்தரப்பிரதேசசட்டமேலவைத்தேர்தல்

புதுடில்லி, ஏப். 20
உத்தர பிரதேசத்தின் பதின்மூன்று தொகுதிகளுக்கான சட்ட மேலவைத் தேர்தலுக்கு 20 பேர் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர்.

வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான திகதி நேற்றுடன் முடிவடைந்தது. வேட்பு மனுத் தாக்கல் செய்தவர்கள் மனுக்களை விலக்கிக்கொள்வதற்கான கடைசிநாள் இம் மாதம் 23ம் திகதியாகும்.

இத்தொகுதிக்கான வாக்குப் பதிவு அடுத்த மாதம் 2ம்திகதி நடைபெறவுள்ளது. (வெ)

## அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை நிறைவேறியது

### சுதந்திரக்கட்சி, கம்யூ., ம.ஐ.மு. எதிர்த்து வாக்களித்தன

(கொழும்பு)
அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணைக்கு ஆதரவாக 125 உறுப்பினர்களும், எதிராகப் 10 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியனபிரரேணையை எதிர்த்து வாக்களித்தன.

கம்பஹா எம். பி. திரு எஸ். டி. பண்டாரநாயக்கா அரசாங்கத்துடன் சேர்ந்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார். (வெ)

## யாழ். சம்பவங்கள்

### யாழ். பொலிஸில் 101 பேர் புகார்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் நடந்த அசம்பாவிதங்கள் தொடர்பாக நேற்றுவரை 101 பேர் பொலிஸில் புகார் செய்துள்ளதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. முத்துத்தம்பி நேற்றுத் தெரிவித்தார்.

வீடுகள் வர்த்தகநிலையங்கள் வாகனங்கள் எரிக்கப்பட்ட சம்பவங்கள் பற்றியும், இறந்தவர்கள், காணாமல் போனவர்கள் குறித்தும் புகார் செய்யப்பட்டுவருகிறது.

இதற்காக யாழ். பொலிஸ் நிலையத்தில், விசேடபிரிவு ஒன்று இன்ஸ்பெக்டர் கே. முத்துத்தம்பி, தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றும், பெண்கள் உட்பட பலர்வந்து புகார் செய்தனர்.

இப்புகாரில் சம்பந்தப்பட்ட பிரதிகள் கடனுக்குடன், இன்ஸ்பெக்டர் கே. முத்துத்தம்பி புகார் செய்தவர்களுக்குவழங்கி வருகிறார்.

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்தினர் நேற்றுவரை இன்னும் புகார்செய்யவில்லை. சகல கட்டடத்திற்கும், பொருட்களுக்கும், ஏற்பட்ட சேதம்பற்றி விபரமாக கணக்கெடுக்கப்பட்டு வருவதாகவும், இந்தக்கணக்கெடுப்பு முடிந்த பின்னரே புகார் செய்யப்படுமெனக் கூறப்படுகிறது. (ஈ)

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 9-ம் திகதி
(21-4-1984)
சனிக்கிழமை

திதி — ஷஷ்டி இரவு 8-08 மணி வரையும்
நக்ஷத்திரம்-மூலம் காலை 7-20 வரை மேல் பூராடம்

மேடம்: அவசர முடிவின் மூலம் ஆபத்தைத் தவிர்த்துக்கொடுத்து வாக்குவீர்கள் மனதில் அமைதி குன்றும் அலுவலர்களின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும் அடக்கம் விரும்பத்தக்கது.

இடபம்: தெய்வதம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும் புனித ஸ்தலயாத்திரைமொன்றும் மேற்கொள்ளப்படலாம் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படுகின்றது உற்சாகமான தினம்.

மிதுனம்: கலையில் பூசல்கள் தோன்றிமறையும் தனிமையை விரும்புவீர்கள். தொழில் புரியுமிடத்தில் கவனம் உடைட்டு வேலைகள் நடைபெறும் நண்பர்கள் சூழ்ச்சி வலை விரிப்பதற்கு முற்படுவார்கள் வியாபார முன்னேற்றம் ஏற்படும்.

கடகம்: ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும் வாகனத்தின் மூலம் அதிக பொருள் வரவிற்கு இடமுண்டு. இனபந்துக்களின் கொண்டாட்டமும் இடம்பெறும். சொர்ணமான தினம்.

சிம்மம்: நீண்டநாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்கள் உதவி தாராளமாகக் கிடைக்கும். புண்ணிய விருப்பு மேலிடும் புத்திரவழியால் சுபமுண்டு.

கன்னி: தூரதேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும், எதிர்பாராத விபத்துக்கும் இடம் ஏற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

துலாம்: காதலர்களுக்கு கற்கண்டானதினம். குடும்பத்தில் குதூகலம் தென்படும். உறவினர்களின் ஆதரவும் பெற்றோரின் ஆசியும் தப்பாமல் கிடைக்கும்.

விருச்சிகம்: தென்றலும் தீயாக மாறும் குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் தோன்றலாம் உணவு விடயத்தில் கவனஞ் செலுத்தவும்.

தனுசு: இறைவழிபாடுமேலிடும். இதயத்தில் அமைதியும் ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார்.

மகரம்: தொழில் துறையில் வெற்றி. விருந்தினர் வருகையுடன் வேடிக்கை பலவுண்டு, இதயம் படுதாவில் இன்பத்தின் மின்னல். சுபதினம்.

கும்பம்: பொதுத் துறையில் நாட்டம் பிறக்கும். மக்களின் ஆதரவு கிடைக்கும், அரசியல்வாதிகளுக்கு செல்வாக்குப் பெருகும். பொன்னான நாள்.

மீனம்: துன்பத்தின் சாயல் மனதிலே படியும். பிறர் புனைந்துரைகளால் மனது புண்படும், சிலர் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்வீர்கள்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ஜனாதிபதிகள் பேச்சு வார்த்தை

டமாஸ்கஸ், ஏப். 20
லெபனான் ஜனாதிபதி ஜமாயலும், சிரியா ஜனாதிபதியும் டமாஸ்கஸில் சந்தித்து லெபனான் பிரச்னை உட்பட மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து நேற்று உச்சக்கட்டப் பேச்சுக்களை நடத்தினார்கள்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
5-55 சிங்கள நிகழ்ச்சி
6-30 ஆங்கில நிகழ்ச்சி
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 கலை நடனங்கள்
7-45 'டிபரன்ற்ஸ் ரோக்ஸ்' நகைச்சுவைச் சித்திரம் (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 நாடக நிகழ்ச்சி (சிங்களம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-00 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்'
10-30 உலகச்செய்தித் தலைப்புகள்
10-35 ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச் தொடர்ச்சி
10-55 நிகழ்ச்சிகள் முடிவு

## வானொலியில் சிறப்பு நிகழ்ச்சி

(கொழும்பு)
மினிப்பே உல்ஹிட்டிய புதிய வாய்க்கால் சம்பிரதாய பூர்வமாக அர்ப்பணம் செய்யப்படுவதை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை ஒன்றில் காலை 9-30 மணிக்கு "மகாவலி கங்கையின் மதுர கங்கை" என்ற அரைமணிநேர சிறப்பு நிகழ்ச்சி ஒலிபரப்பாகும்.

அர்ப்பணிப்பு நிகழ்ச்சிகளை இன்றிரவு 7 மணிக்கு நேர்முக ஒலிப்பதிவுகளுக்குப் பின் ஒலிபரப்பாகும்.


★ ஸ்பெயின் ★ இத்தாலி ★ பிரான்ஸ்
★ சுவிற்சலாந்து ★ கனடா
சகாய விலையில் ரிக்கட்டுகளுக்கும்
பிரயாண ஒழுங்குகளுக்கும்




AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS

99-2/56 B, கபூர் பில்டிங்
2-வது மாடி கொழும்பு-1.
போன்: 549865

538 B, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 22689






நெஸ்டமோல்ட்
"நெஸ்கியூறிற்றி பெகட்"
பந்திக்குமுந்தி ஆளுக்கு
ரூ 100 பரிசு பெறுவோர்

6-வது வார வெற்றியாளர்கள் (16-4-84-ம் திகதி வரை வந்து குவிந்த விண்ணப்பங்களிலிருந்து.)

| | | |
|---|---|---|
| பி. கி. சமகே, கொஹொம்பன. | எச். ஏ. ஹெட்டியாராச்சி, தாட்டறனகொட. | வை. எம். பௌஸர், உக்குவெல. |
| சி. ரி. ராஜபக்ஷ, தங்கொட்டபிற்றிய, | வை. மனோகரன், மிருசுவில் | எம். பி. விக்லியம், கொழும்பு - 10. |
| ஏ. யு. சேனதிர, தேமோதர | கே. பி. ஜயதிலக்க, வாதுவ. | எம். டி. எல். விஜேதுங்க, வக்பதிய. |
| ரி. எச். கீர்த்திரட்ன, காலெடெனிய. | எஸ். சிவசங்கர், மூதூர். | பி. ஆர். பெரேரா, திவுலபெனிய. |
| டபிள்யூ. டி. குமாரசிங்ன, புஸல்லாவ. | எல். ஐ. எல். இலாஹி மாவனல்ல. | எல். எச். அமரசிங்க, பிபில. |
| கி. தேவேந்திரா, மாரமை | எல். அக்கிஸ், பெற்தோட்ட. | எம். எம். நாஷிர், கடுகண்ணாவ. |
| எம். ஈ. பெரேரா, சீதுவ. | ஆர். எம். ஜயசிங்க, டுணுகில. | ஜே. டி. தஷீரா, வெக்கிரால. |
| ஆர். ஏ. விக்சன், மூன்றாமுறிப்பு வவுனியா | பி. ஆர். பி. பறணகம, கிரில்ல. | எம். ஆர். பாப்ப, தெனியிபிட்டிய. |

கே. பூபாலசிங்கம்,
மட்டக்களப்பு.

அவ்வப்போது வெற்றிபெறுவோர் ஒவ்வொருவருக்கும் ரூ 100/- க்கான 'நெஸ்கியூறிற்றி' காசோலை இரண்டு வாரத்துள் அனுப்பிவைக்கப்படும்.

நெஸ்டமோல்ட் - உங்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த உகந்த பானம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கையில் முன் எப்போதும் இதுபோன்ற போட்டி நடந்ததே கிடையாது

# நெஸ்டோமோல்ட் 'நெஸ்கியூறிற்றி பெக்ட்' போட்டி

★ 1-ம் பரிசு:

## வெல்லுங்கள் – மாதம் தோறும் ரூ.1000 வாழ்நாள் முழுதும்!

### (அல்லது இப்போதே ரூ. 100,000 ரொக்கம்)



★ 2-ம் பரிசு:


**மாதம் தோறும் ரூ. 500 வாழ்நாள் முழுதும்!**

(அல்லது இப்போதே ரூ.50,000/- ரொக்கப் பரிசு)

★ மூன்று 3-ம் பரிசுகள்:

**ஒவ்வொன்றும் ரூ. 15,000 பெறுமதியான தங்கச் சங்கிலிகள்**

(அல்லது சமமான ரொக்கப் பணம்)



★ 100 ஆறுதற் பரிசுகள்:

**ஒவ்வொன்றும் ரூ. 250 பெறுமதியான அமெரிக்கன் ஜோர்ஜெட் சாரிகள்**

(அல்லது சமமான ரொக்கப் பணம்)






விலை: ரூ 41.90

இப் போட்டியில் வெல்வது மிகச் சுலபம்! நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவே; கீழ்க் காணும் கேள்விக்கு விடை எழுதி, நெஸ்டோமோல்ட் டின்னின் உட்புறம் உள்ள மென் தகரத் தாளுடன் இணைத்து, உங்கள் விண்ணப்பத்தாளை அனுப்ப வேண்டும். தயவு செய்து அந்த மென் தகரத் தாளில் சிவப்பு நிற 'நெஸ்கியூறிற்றி' ஒட்டுத்தாள் இருக்கும்படி நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள். அது இருக்கும் மென் தகரத் தாள் மட்டுமே போட்டிக்குச் செல்லுபடியாகும்.

முதலில் இழுக்கும் சரியான விடை (அதாவது, நடுவர்கள் முன்கூட்டியே சரி என்று தீர்மானித்து வைக்கும் விடையுடன் ஒத்துப்போகும் விடை) முதற் பரிசு பெறும். அடுத்து இழுக்கப்படும் சரியான விடைகள், வரிசைக் கிரமமாக 2-ம் 3-ம் மற்றும் ஆறுதற்பரிசுகளைப் பெறும்.

★ பந்திக்கு முந்தும் பரிசுகள்:

வாரம் தோறும் வந்து சேரும் முதல் 25 சரியான விண்ணப்பங்களுக்கு ரூ. 100/- வீதம்! (பரிசு பெறுவோர் விபரம் இப் பத்திரிகையில் வாரம் தோறும் வெளிவரும்.)

**போட்டி விதிகள்**

1 எல்லா விண்ணப்பங்களும் தெளிவாகவும் முழுமையாகவும் இருக்க வேண்டும்.
2 எத்தனை விண்ணப்பங்களையும் ஒருவர் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் சிவப்பு நெஸ்கியூறிற்றி ஒட்டுத்தாள் பொறித்த, நெஸ்டோமோல்ட் மென் தகரத்தாள் இணைக்க வேண்டும்.
3 எல்லா விண்ணப்பங்களிலும் ''நெஸ்டோமோல்ட் நெஸ்கியூறிற்றி பெக்ட்'' என்று கடித உறையில் குறிப்பிட்டு, த. பெ. எண் 2061 கொழும்பு என்ற விலாசத்துக்குத் தபாலில் அனுப்ப வேண்டும்.
4 வாரம் தோறும் இழுக்கும் முதல் 25 சரியான விண்ணப்பங்களுக்கு ரூ. 100 வீதம் ரொக்கப் பரிசு கிடைக்கும். வேறு பரிசுகளையும் பெற இவர்களுக்குத் தகுதியுண்டு.
5 கம்பனி அதன் விளம்பரப் பிரதிநிதிகள் ஆகிய நிறுவன ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களையும் தவிர இலங்கையில் வசிக்கும் எவரும் போட்டியில் பங்கு பெறலாம்.
6 நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. மேற்கொண்டு கடிதத் தொடர்புகள் ஏற்கப்படமாட்டா.

**மாதம் தோறும் ரூ. 1000/- வாழ்நாள் முழுதும் நம்ப முடியவில்லையோ?!**

ஆம், நம்புவது கஷ்டம் தான்! ஆனாலும் இப் பரிசு உங்களுக்கானதாகலாம் ஏனென்றால் நீங்கள் போட்டியில் வென்றால் ரூ. 100,000/- தொகையை மக்கள் வங்கி நிலையான வைப்புக் கணக்கில் உடனே நாம் போட்டு வைப்போம். இத் தொகை மாதம் தோறும் ரூ. 1000/- வட்டிப் பணத்தைச் சம்பாதித்து உங்களுக்கு வழங்கும், வாழ்நாள் முழுதும்!

**நினைத்துப் பாருங்கள்! மாதம் தோறும் மேலும் ரூ. 1000/- கிடைத்தால் என்னவெல்லாம் செய்யலாம்!**

(ஆனால், மாறாக, விரும்பினால் நீங்கள் ரூ. 100,000/- ரொக்கத்தை நேரடியாக முழுதாகப் பெற்றுக் கொள்ளலாம்) 2-ம் பரிசுக்கும் விதிகள் இதே போலத் தான்.

**விரையுங்கள்! விண்ணப்பங்களை ஏற்கும் கடைசி நாள்: 25மே 1984.**

**விண்ணப்பத்தாள்**

இவற்றில் இலங்கை ஆகக் கூடிய புகழ் பெற்றது எந்தப் பொருளுக்கு? Y




குறிப்பிட்ட கட்டங்களுள், உங்கள் கருத்துப்படி இப் பொருள்களின் முக்கியத்துவத்தை வரிசைப் படுத்தி இலக்கம் இடுங்கள். (அதாவது; உங்கள் முதலாவது தெரிவுக்கு '1'. இரண்டாவது தெரிவுக்கு '2' என்ற முறையில் இலக்கம் இடுங்கள்) உங்கள வசதிக்காக ஒரு பொருளுக்கு நாமே முன்கூட்டி இலக்கமிட்டிருக்கிறோம். (முக்கிய குறிப்பு: இந்தக் கூப்பனுடன் நெஸ்டோமோல்ட் டின்னின் உட்புறமுள்ள சிவப்பு நெஸ்கியூறிற்றி ஒட்டுத்தாள் பொறித்த மென் தகரத் தாள் இணைத்திருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள் )

எல்லா விண்ணப்பங்களிலும், ''நெஸ்டோமோல்ட் நெஸ்கியூறிற்றி பெக்ட் என்று கடித உறையில் குறிப்பிட்டு, த. பெ. எண் 2061, கொழும்பு என்ற விலாசத்துக்கு தபாலில் அனுப்ப வேண்டும்.

பெயர்: ______

விலாசம்: ______

மாவட்டம்: ______

வியாபாரியின் பெயர், விலாசம்: ______

அலுவலகப் பத்திரிகை இலக்கம் S/385

HTL NL 1441

# நெஸ்டோமோல்ட்

## உங்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த உகந்த பானம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்திலிருந்து நியமனம்பெறும் ஆசிரியர்கட்கு மகரகமவில் 3வார பயிற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஆசிரியர்களாக நியமனம் பெறுபவர்களுக்கு மகரகமவில் மூன்றுவாரப் பயிற்சி நடைபெறவிருப்பதாக நேற்று முன்தினம் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

கல்வியமைச்சினால், யாழ்ப்பாணத்திலிருந்து ஆசிரியர் நியமனம் பெறுபவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள இக்கடிதங்களில் பயிற்சி 16-4-84 முதல் 7-5-84 வரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இக்கடிதங்கள் 17-4-84லேயே சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைத்துள்ளது.

தற்போதுள்ள நிலையில் இப்பயிற்சியில் பங்குபற்ற முடியாதிருப்பதாக யாழ். பிரஜைகள் குழு செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியத்திற்கு நியமனம் பெற்ற இவர் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் மேலிடத்துடன் இவ்விடயமாக தொடர்புகொண்டுள்ளார்.

## இலவச மினி பஸ் சேவை

(மாவிட்டபுரம்)

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் தேர் உற்சவத்தன்று மாதகல் யாழ்ப்பாண தனியார் மினி பஸ் உரிமையாளர்கள் மாதகலுக்கும், சித்தங்கேணிக்குமிடையில் இலவச மினிபஸ் சேவையை மேற்கொண்டனர். [illegible] சேவையிலீடுபட்டுழைக்கும் [illegible]


ராஜா (யாழ்.நகர்)
ஜெய்சங்கர் - விஜயா
பெண்ணே நீ வாழ்க

[illegible]ணி (யாழ். நகர்)
சக்கரவர்த்தி திருமகள்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
மறுஅறிவித்தல்
10-30, 2-00 மணி மட்டும்
சிவாஜி — பாரதி
தங்கச் சுரங்கம்
(புதியபிரதி)

[illegible]னோகரா (யாழ். நகர்)
தினசரி 2 காட்சிகள்
கமலஹாசன் (இருவேடம்)
ஸ்ரீதேவி
கல்யாணராமன்
(புதிய பிரதி கலர்)

ஹரன் (யாழ். நகர்)
A MID SUMMER NIGHT'S SEX COMEDY
வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் SEX நகைச்சுவை விருந்து

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 2 காட்சிகள்
ரவிச்சந்திரன் - விஜயா
சோ - நாகேஷ் நடித்த
நினைவில் நின்றவள்
(முழுநீள ஹாஸ்யப்படம்)

வெல்லி [illegible]
மறு அறிவித்தல் வரை
2-30 காட்சி மட்டும்
கமலஹாசன் - [illegible]
சகலகலாவல்லவன்

ரீகல் (யாழ். நகர்)
காலை 10-30, 2-00 மணிக் காட்சிகள் மட்டும்
TEN. SEX
(Color)
(Strictly for Adults only)

[illegible] (யாழ்நகர்)
ரவீந்தர் - ரூபா
ஒரு தலை ராகம்

வெலிங்டன்
தினசரி 10-30 2-15 6-15
JAMES BOND FAME
Roger Moore in
ESCAPE TO ATHENA
(Action packed thriller)
யாழ்நகரில் கடைசித் தடவையாக நாளை தினம் மட்டுமே காண்பிக்கப்படும்.




# தரியாமல் றேனோல்ட்ஸ் விரைவாக எழுதும்!

எந்தச் சாதாரண குமிழ் முனைப் பேனாவையும் தரையிலே முனை படக்கீழே போடுங்கள். பிறகு, அதன் எழுத்து எப்படிக் குலையுமென்று பாருங்கள்.

றேனோல்ட்ஸ் அப்படியன்று. ஏனெனில், கடும் அடி பட்டாலும் கண்டபடி பாவித்தாலும், தன் மென்மை குலையாதபடி, தனித்துவமாக உருவாக்கிய டங்ஸ்டன் காபைட் குமிழ் முனை கொண்டது றேனோல்ட்ஸ். அத்துடன் அதிசிறந்த மையை அடக்கியிருப்பது றேனோல்ட்ஸ். இந்த இரண்டு அம்சங்களுடன், பிரான்ஸ் தேசத்து றேனோல்ட்ஸ் நிறுவனத் தொழில் நுட்பத் திறனும் தரக் கட்டுப்பாடும் அதில் இணைந்திருக்கின்றன.

விளைவு - தொடக்கி முடிக்கும் வரை, சிறப்புயர்ந்த, தெளிவான, சுத்தமான, மெத்தென்ற எழுத்தை உங்களுக்கு வழங்கும் உண்மையான உன்னதப் பேனா. களங்கக் கறை இல்லை. தலைவலி தரும் மைத் தடை இல்லை. கசிந்து பொசியும் தொல்லையே இல்லை.

எனவே, நீங்கள் எழுதும் இடம் - வித்தியாசாலை, வேலைத்தலம், வீடு, எதுவானாலும் - நாடுங்கள் றேனோல்ட்ஸ் -

**எப்பொழுதும் அது இதமாக எழுதும்.**

**இலவச அறிமுகச் சலுகை**

பாடசாலைகள். அலுவலகங்கள். கடைகள். தொழிற்சாலைகள். ஹோட்டல்கள். குறைந்தது 1000 பேனாக்களுக்குக் கொள்முதற் கட்டளை அனுப்புங்கள். (18 எழுத்துகளுக்கு மேற்படாமல்) உங்கள் நிறுவனப் பெயர் அல்லது ஒரு வாசகத்தைக் குழாயில் இலவசமாக அச்சிட்டு வழங்குவோம்.
நாடுங்கள்: விற்பனைப் பிரிவு நிர்வாகி,
ஷோ வலஸ் அன்ட் ஹெட்ஜஸ் லிமிட்டெட், தொலைபேசி: 20671-9

விலை: ரூபா 3.25

உற்பத்தியாளர்:
பென்பெல்ஸ் லிமிட்டெட்.
பிரான்ஸ் தேசத்து றேனோல்ட்ஸ் நிறுவனத் தொழில் நுட்பக் கூட்டுறவுடன் தயாரித்தது.
விநியோகிப்போர்:
ஷோ வலஸ் அன்ட் ஹெட்ஜஸ் லிமிட்டெட்.

TAL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கொள்ளைகள் தொடருமானால்— ப. நோ. கூ. சங்கங்களுக்கு விரைவில் மூடுவிழாக்கள்!"

(புலோலி)

"பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அடுத்தடுத்து கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றது. இச்சமூக விரோத செயல்கள் தொடர்ந்து நிகழுமாயின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூடுவிழாக்கள் வெகுதூரத்தில் இல்லை. தமிழ் மக்களுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்துதவுவதையே தன் சேவையாகக் கொண்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அழிக்க நினைக்கும் இக்கொள்ளையர்களைத் தமிழ்மக்கள் இனங்கண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் பாதுகாக்க வேண்டும்."

இவ்வாறு புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத்தலைவர் திரு. வி. கதிர்காமலிங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். திரு. கதிர்காமலிங்கத்தால் விடுக்கப்பட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது!

எமது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அடுத்தடுத்து கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன. இனக்கலவரங்கள் மத்தியிலும் கடும் மழையின் அனர்த்தங்களின் மத்தியிலும் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் களைப்புப் பாராது தமிழ்மக்களுக்கு இரவும் பகலும் அயராது பாடுபட்டு சேவையாற்றிவரும் எமது நிறுவனத்திற்கு இவ் நிலைசத்தியமாக பெருநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களுக்குத் தவித்த தருணங்களில் கட்டுப்பாடின்றிச் சகல இடங்களிலும் அப்பொருட்களை விநியோகம் செய்கின்றோம். இரவுநேரத்தில் கெடுபிடிகளுக்குப் பயந்த ஊரே அடங்கி ஒடுங்கி உறங்கும் சமயம் எம் உயிரையும் பொருட்படுத்தாது எரிபொருள் விநியோகம் புரிகின்றோம். இவைகள் எல்லாம் எமது தமிழ் மக்களுக்காகவே.

ஆனால் இதைச் சாதகமாகப் பயன்படுத்திப் பணத்தைக் கொள்ளையடிப்பதோடு சில வேளைகளில் எம்மைத் துன்புறுத்தி எம்முடைய கைக்கடிகாரங்கள், சைக்கிள்வண்டிகள் போன்றவைகளைக்கூட இக் கொள்ளையர்கள் அபகரித்துச் செல்கின்றார்கள்.

இக்கொள்ளையர்கள் யார்? மக்களுக்குச் சேவைசெய்ய விடாது எம்மைத் தடுக்கும் இக்கொள்ளையர்களின் நோக்கம் யாது? என்பதைத் தமிழ் மக்கள் இன்று கணவேண்டும். கூட்டுறவுச் சங்கம் மக்கள் மத்தியில் அதிக இலாபத்தை எதிர்பாராது, மக்கள் சுரண்டப்படுவதைத் தடுத்து மக்களுக்குச் சேவை செய்யும் ஒரு பரந்த நோக்குடைய ஸ்தாபனமாகும். இக்கூட்டுறவுச் சங்கங்கள் கொள்ளைச் சம்பவங்களினால் நிலைகுலைந்து தடுமாறுகின்றன.

கொள்ளையடிக்கப்படும் பணத்தைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஈடுசெய்வதாயின் ஊழியர்களுக்கான நியாயமான சம்பள உயர்வுகளைக் கூடக் கொடுக்க முடியாமற் போகலாம். சில ஊழியர்களை வேலைநீக்கநேரிடலாம். இதையும் மீறினால் சங்கத்தை இழுத்து மூடவேண்டிவரலாம்.

தமிழ்மக்களுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்துதவுவதே தன் இலட்சியமாகக்கொண்ட பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களை அழிக்க நினைக்கும் கொள்ளையர்களைத் தமிழ்மக்கள் இனங்கண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் பாதுகாக்கவேண்டும்.

## இப்படியும் நடக்கிறது

அவர் ஓர் இளைஞர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் கடந்த வருடம் டிசம்பர்மாதம் நடைபெற்ற க.பொ.த (சாதாரணதரம்) பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்திருந்தார்.

அனுமதி அட்டை கிடைத்தது. சுட்டெண்ணும் வழங்கப்பட்டிருந்தது.

இரண்டு தினங்களுக்கு முன்னர், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து பெறுபேற்று அட்டவணை அந்த மாணவனுக்குக் கிடைத்திருக்கிறது.

இதில் என்ன புதுமை? அந்த மாணவன் பரீட்சைக்குத் தோற்றுமலேயே, பரீட்சைப் பெறுபேறு கிடைத்திருக்கிறது!

★ ★ ★

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் செய்தித்துறையில் 'ஓட்டப்போட்டி' நடக்கிறதா?

இவ்வாரத்தில் இ. ஒ. கூட்டுத்தாபனம் ஒலிபரப்பிய செய்திகளில்;

"[1] உப்பு முதல்தடவையாக இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது காலி துறைமுகத்திலிருந்து இந்த உப்பு ஏற்றுமதியாகிறது. (2) கொழும்பு கோட்டையிலிருந்து கிளிநொச்சிக்குப் புறப்படும் 'இன்ரசிற்றி' யும். யாழ்தேவியும் கிளிநொச்சி சென்றடைந்ததும் உடனடியாகவே கோட்டைக்குப் புறப்படும்."

விளக்கம் [1]: கடந்த நான்கு ஆண்டுகளாகக் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து ஆபிரிக்க நாடுகளுக்கும் பங்களாதேஷுக்கும் உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

விளக்கம் (2): "இன்ரசிற்றி" யும் யாழ். தேவியும் குறிப்பிட்ட தினம் மூன்றுமணி நேரம் தாமதித்தே அதாவது வழக்கம்போலவேதான் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டது. நேரமாகத்துக்குக் கொழும்பு சென்றுவிடலாம் என்று யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு விழுந்தடித்துக்கொண்டு சென்றவர்கள் வானொலிச் செய்திபற்றி கிளிநொச்சி ரயில் நிலைய அதிகாரிகளிடம் விளக்கியபோது அவர்கள் கூறிய பதில்: "ரயில் சேவையை நடத்துவது ரயில்வேப் பகுதிதான். இலங்கை வானொலி அல்ல!"

'ஊடுருவி'

## அடைக்கலமாதா ஆலயம் திருத்தவேலை

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணம் அடைக்கலமாதா கோவில் திருத்தவேலை ஆரம்பமாகியுள்ளன

யாழ் மாநகர எல்லையுள்ளன இவ்வாலயம் குண்டுவீச்சின் தாக்குதலுக்குள்ளாகி சேதமடைந்தது தற்சமயம் இவ்வாலயம் வழிபாட்டுக்காக துரித திருத்தவேலைகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாருடையது

நயினாதீவைச் சேர்ந்த திரு பி. சிவலிங்கம் காரைநகரைச் சேர்ந்த திரு வேலுப்பிள்ளை கந்தசாமியின் அடையாள அட்டையையும், ஒரு அல்பா வேலணை கிழக்கைச் சேர்ந்த திருமதி அன்னலட்சுமி சண்முகராசா என்பவரின் அடையாள அட்டையையும் கண்டெடுத்து சுழிபுரம் அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## இராணுவத்தினருடன் தேடுதல் நடத்த விசேட பொலிஸ் பிரிவு

(காங்கேசன்துறை)

இராணுவத்தினருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் பிரிவில் மூன்று உதவிப் பொலிஸ் அதிபர்கள் தலைமையில் விசேட பொலிஸ்பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் பிரிவுக்குப் பட்ட பகுதிகளில் இராணுவத்தினருடன் இணைந்து அவர்களுக்கு உதவியாக தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மூன்று உதவிப் பொலிஸ் அதிபர்கள் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்த அதிரடிப் பொலிஸ் படைக்கு இந்த உதவிப் பொலிஸ் அதிபர்கள் தலைமைதாங்கி இராணுவத்தினருடன் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான பகுதிகளில் தேடுதல் மேற்கொள்வது சந்தேகத்திற்கிடமானவர்களைக் கைது செய்வது அவர்களை இராணுவ விசாரணைக்குட்படுத்துவது ஆகிய பணிகள் மேற்படி பொலிஸ் இராணுவ கூட்டுக் கோஷ்டியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பகுதியில் மேற்படி கோஷ்டியினர் கடந்த சில தினங்களாக மேற்கொண்ட தேடுதலின்போது சிலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் அதிபராக இருந்த திரு. இக்னேசியஸ் பெரேரா இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய ஜனாதிபதியின் மெக்சிக்கோ விஜயம்

புதுடில்லி, ஏப் 20

இந்திய ஜனாதிபதி திரு. ஸெயில்சிங் இம்மாதம் 22-ம் திகதி தொடக்கம் 30-ம் திகதி வரை மெக்ஸிக்கோ, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

## லொறிவிபத்து ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் நேற்று நடந்த லொறி விபத்தில் அரியாலையைச் சேர்ந்த வி. பரமசாமி என்பவர் பலியானார். மரணவிசாரணைக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஈ)

## சிங்கள மகாவித்தியாலய பொருட்கள் அகற்றப்பட்டன

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்திலுள்ள உபகரணங்கள் பொருட்கள் யாவும் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் பாதுகாப்புடன் மேற்படி வித்தியாலயப் பொருட்கள் யாவும் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## வட பிராந்திய பயணிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய பயணிகள் சங்கக் கூட்டம் சங்கத்தலைவர் செ. குமாரசாமி தலைமையில் கோண்டாவில் சாலையில் அண்மையில் இடம்பெற்றது.

சபைத் தலைவர் சி. கனகரத்தினம் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

பயணிகளின் வசதிகள் குறித்தும், தேவைகள் குறித்தும் பலர் பேசினர்.

## சேதமுற்ற கட்டடம் திருத்தப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ் ஐக்கியவியாபார சங்கத்தில் இடிபாடுகளை அகற்றும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது; பாரந்தூக்கும் பெரிய கிரேன் ஒன்றின்மூலம் மேல்மாடியில், இடிந்துபோன துண்டுகள் அகற்றப்பட்டுவருகிறது. கீழ்ப்பகுதியிலும், எரிக்கப்பட்டவானங்கள் அகற்றப்பட்டுவருகின்றன. (ஈ)

## புலமைப்பரிசில்

(மன்னார்)

பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 6 மாணவர்களுக்கு மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபை இவ்வருடம் முதல் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது

இப் புலமைப் பரிசிலுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் தமது பட்டப்படிப்பு முடியும்வரை மாதம் ஒன்றிற்கு 800 ரூபா வீதம் பணம் பெறுவார்கள்.

## முருகன் கோவிலுக்கு சவூதியிலிருந்து உதவி!

(டாஹ்ரான்)

சவூதி அரேபியாவில் டாஹ்ரானில் உள்ள கம்பனி ஒன்றில் பணியாற்றும் இந்திய, இலங்கையைச் சேர்ந்த சில ஊழியர்கள் காங்கேசன்துறை மார்புநோய் வைத்தியசாலை முருகன் கோயில் தரிசன மண்டபத்திற்கென 1815 ரூபாவை வழங்கியுள்ளனர்.

எஸ். ராஜன் (கன்னியாகுமரி) செய்யது முகம்மது (தஞ்சாவூர்) சார்ள்ஸ் மைக்கேல் (மல்லாகம் கீழ்) ஆர். கிரிபாலசிங்க (வல்வெட்டித்துறை), ரீ சிதம்பரநாதன் (தெல்லிப்பழை), ரீ. உலகநாதன் (மட்டுவில்), எம். லோகநாதன் (வட்டுக்கோட்டை), எஸ். ஜோகேந்திரராஜா (மயிலிட்டி) ஆகியோரே இந்நிதி உதவி புரிந்துள்ளனர்.

பிரஸ்தாப கோயிலில் வழிபடும் நோயாளிகள் பக்தர்கள் வெயில் மழையில் இருந்து பாதுகாப்பாக வழிபடுவதற்கு ஒருதரிசன மண்டபம் இல்லை என்று முருகன் கோயில் பரிபாலனசபை விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே இந்நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாக எஸ். ஜோகேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

## ராய்ட்டர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தொடர்வு கொள்வதன் மூலம் இழப்புகள் குறித்த சரியான தொகையினை வழங்க முடியும்" என்றும் பேராசிரியர் ஜெயசிங்கம் மேலும் தெரிவித்தார்.

## நால்வரைப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சில்வா, உதவி அத்தியட்சகர் கனகசிங்கம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பிலுள்ள இராணுவ முகாம்கள் சிலவற்றிலிருந்து வெடி மருந்துகள் மாயமாக மறைந்து வருகின்றன என்று சில காலங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஸ)

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegrm: Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org